சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03-ம் நாள் திங்கட்கிழமை

வழக்கிடை மனு எண்.02/2024 in அசல் வழக்கு எண்.42/2023

அன்பழகி (இறந்தவர்) ...மனுதாரர்/ வாதி

1. ராஜகோபால்

2. கலைச்செல்வி ... மனுதாரர்கள்/வாரிசாக சேர்க்கப்பட வேண்டியவர்கள்

/எதிர்/

1. கஸ்தூரி

2. பெருமாள் ..... எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 13.02.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. ஆனந்தன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

**உத்தரவு**

அசல் வழக்கில் வாதியான வாதியான அன்பழகி என்பவர் கடந்த 01.05.2024 தேதியன்று இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளை இந்த வழக்கில் வாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி உ.வி.மு.ச கட்டளை XXII விதி 3-ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்-**

தான் இம்மனுவில் 1ம் மனுதாரர் என்றும், 2ம் மனுதாரர் தன் மகள் என்றும், மேற்படி தாங்கள் இருவரும் அசல் தாவாவில் இறந்துவிட்ட வாதி அன்பழகி என்பவரின் வாரிசாக சேர்க்கப்பட வேண்டியவர்கள் என்றும், 2 ம் மனுதாரருக்காகவும் சேர்த்து இந்த மனுவை தாக்கல் செய்வதாகவும், மேற்படி வழக்கினை தன் மனைவி அன்பழகி என்பவர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.246/2018 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது இந்த வழக்கின் வாதியான தன் மனைவி கடந்த 01.05.2024 அன்று உடல்நலக்குறைவு காரணமாக மனுதாரர்களாகிய தங்களை சட்டப்படி வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், தங்களை தவிர வேறு யாரும் வாரிசுகள் இல்லை என்றும், மேற்படி தங்களை மனுதாரர்களாக சேர்த்து இந்த வழக்கை நடத்தினால் மட்டுமே சட்டப்படியான தீர்வு பெறமுடியும் என்பதால் இந்த மனு தாக்கல் செய்வதாகவும், இந்த மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் தங்களுக்கு பெரும்

பாதகமும், பேரிழப்பும் ஏற்படும் என்றும், அதனை எந்த விதத்திலும் ஈடுசெய்ய முடியாது என்றும், எனவே அசல் வழக்கில் இறந்துவிட்ட வாதி அன்பழகி என்பவரின் வாரிசுகளை வாதிகளாக சேர்க்கவேண்டி உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்:-**

**(3.1)** மனுதாரர் இந்த மனுவினை வாதி அன்பழகி இறந்துவிட்டபடியினால் அவருடைய வாரிசுகளை இந்த வழக்கில் உரிய பார்ட்டிகளாக சேர்ப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டியும், உரிய காலத்தில் தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட அபெட்மெண்டை ரத்து செய்ய வேண்டியும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் மேற்படி 2 மனுக்களுமே நிலைக்கதக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் இந்த வழக்கு செய்யாறு சார்பு நிதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி 01.05.2024 அன்று உடல்நலக்குறைவு காரணமாக இறந்துவிட்டார் என்றும், அவர் தன்னுடைய கணவரான 2ம் மனுதாரரையும், மகளான 3ம் மனுதாரரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், 2ம் மனுதாரர் உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் மிகவும் வயதாகிவிட்டதாலும் தன்னுடைய மகள் வீட்டில் குடியிருந்து வந்ததாலும் உரிய சட்டநடவடிக்கையை உடனே எடுக்க முடியவில்லை என்றும், அவ்வாறு உடனே உரிய சட்டநடவடிக்கை எடுக்காததால் இந்த வழக்கு அபெட்மெண்ட்

ஏற்பட்டதாகவும், வாரிசு மனுவை தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், அந்த காலதாமதமும் அபெட்மெண்டும் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் இல்லையென்றால் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவோம் என்றும் கண்டு தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள காரணம் ஏற்புடைய காரணம் இல்லை என்றும், ஆனால் இந்த வழக்கிற்காக வேண்டுமென்றே பொய்யான காரணத்தைக்கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இந்த மனு நிலைக்கதக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**4 .இங்கு தீர்மானிக்க வேண்டிய அம்சம் யாதெனில்:-**

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

(i) இருதரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் இல்லை. இருதரப்பின் வாதம் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் வாதியான அன்பழகி என்பவர் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல் செய்து, நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 01.05.2024 ம் தேதி தனது வாரிசுகளான 2 மற்றும் 3 எதிர்கால வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், அதனால் மனுதாரர்கள் தங்களை இந்த தாவாவில் 2 மற்றும் 3 வாதிகளாக சேர்க்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் பொய்யான காரணங்களுடனும், காலதாமதப்படுத்தவேண்டும் என்றும்

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்கள் தரப்பில் கூறுவதுபோல் இம்மனுவை அனுமதிக்காமல் போனல் இவ்வழக்கை மேற்கொண்டு நடத்த முடியாது. இம்மனுவை தள்ளுபடி செய்வதற்கு போதுமான முகாந்திரம் இல்லை. மனுதாரர்கள் இறந்த வாதியின் சட்டப்படியான வாரிசுகள் ஆவர். எனவே அவர்களை இந்த வழக்கில் வாதிகளாக சேர்க்கும்பட்சத்தில் மட்டுமே இவ்வழக்கை மேல்நடத்த முடியும். எனவே நீதியின் நலன் கருதி மனுதாரர்களை இவ்வழக்கில் 2 மற்றும் 3 வாதிகளாக சேர்க்க அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்:-**

மனுதாரர்கள் எதிமனுதாரர்களுக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ வருகின்ற 11.11.2025-ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். மீண்டும் இந்த மனு 12.11.2025 அன்று அழைக்கப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

சார்பு நீதிபதி,
வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

சார்பு நீதிபதி,
வந்தவாசி.